செய்தி வெளியீடு எண். 156 நாள். –16.2.2010

## செய்தி வெளியீடு

## தமிழ்நாடு ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பு மாநாட்டில் அண்மையில் அறிவித்தபடி, பார்வையற்றோர்க்கு வழங்கப்படுவதைப்போலவே அனைத்து வகையிலும் ஊனமுற்ற 58 ஆயிரத்து 293 பேருக்கு 23 கோடியே 47 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் செலவில் வேலைவாய்ப்பற்றோர் நிவாரண உதவித் தொகை!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

**தமிழ்நாடு ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பினர் மாநாடு 21.1.2010 அன்று சென்னையில் நடைபெற்றபொழுது, "பார்வையற்றோர்க்கு வழங்கப்பட்டு வருவதைப்போலவே, அனைத்துவகை ஊனமுற்றோர்க்கும் வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை வழங்கப்படும்" என முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்திருந்தார்கள்.**

**அந்த அறிவிப்பின்படி, தமிழகம் முழுவதிலும் உள்ள உடல் ஊனமுற்றோர், காது கேளாதோர் போன்ற அனைத்து வகையிலும் ஊனமுற்ற 58 ஆயிரத்து 293 பேருக்கு வேலை வாய்ப்பற்றோர் நிவாரண உதவித் தொகை வழங்கிட மொத்தம் 23 கோடியே 47 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் அனுமதித்து முதலமைச்சர் கலைஞர் இன்று (16.2.2010) ஆணையிட்டுள்ளார்.**

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–600 009.